## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி –2014-2015ஆம் ஆண்டின் அறிவிப்பு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கான CAT (Common Admission Test) பொது நுழைவுத்தேர்வுக்கான பயிற்சி அளித்தல் – நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை**

அரசாணை (நிலை) எண்.44 — நாள் : 22.09.2016

துன்முகி புரட்டாசி 6, திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.25, ஆதி(ம)பந துறை நாள் 4.3.2015.
2. அரசாணை (நிலை) எண்.25, ஆதி(ம)பந துறை நாள் 1.03 .2016.

*****

**ஆணை :–**

மேலே முதலாதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்கள் IIM போன்ற கல்வி நிறுவனங்களில் MBA போன்ற மேற்படிப்பு படிக்க நடத்தப்பெறும் பொது நுழைவுத் தேர்வில் (CAT-Common Admission Test) தேர்ச்சி பெறும் வகையில் ஆண்டிற்கு 100 தகுதியுள்ள மாணாக்கர்களுக்கு பொது நுழைவு தேர்வு பயிற்சி அளிப்பதில் தலைசிறந்த பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி அளிக்கவும் இதற்காக ஒரு மாணவருக்கு ரூ.50,000/- வீதம் 100 மாணாக்கர்களுக்கு ஆண்டுக்கு ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள நிர்வாக ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பான விதிமுறைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

3. மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் 2014-15ஆம் ஆண்டின் அறிவிப்பின்படி பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்கள் IIM போன்ற கல்வி நிறுவனங்களில் MBA போன்ற மேற்படிப்பு படிக்க பொது நுழைவுத் தேர்வில் (CAT-Common Admission Test) தேர்ச்சி பெறும் வகையில் ஆண்டிற்கு 100 தகுதியுள்ள மாணாக்கர்களுக்கு பொது நுழைவு தேர்வு பயிற்சி அளிப்பதில் தலைசிறந்த பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி அளிக்கவும் இதற்காக ஒரு மாணவருக்கு ரூ.50,000/- வீதம் 100 மாணாக்கர்களுக்கு ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) தொகை 2016-2017ஆம் நிதியாண்டில் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையானது கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 01 ஆதிதிராவிடர் நலன் 277 – கல்வி - பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத்திட்டம் –LA – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு பொது நுழைவுத் தேர்வு பயிற்சி அளித்தல் 72- பயிற்சி
(குதொகுஎண்.2225 01 277 LA 7207)

5.மேலே பத்தி 3இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று மேலாண்மை இயக்குநர் தாட்கோ அவர்களுக்கு வழங்கிட ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அரசு அனுமதியளிக்கிறது.

6. இத்திட்டத்தினை மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி செயல்படுத்துமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் மற்றும் தாட்கோ மேலாண்மை இடக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணாக்கர்களின் தேர்வு செய்த, விவரங்களையும் மற்றும் இத்திட்டத்தின் மாவட்ட வாரியாக பயன்பெற்றோர் குறித்த விவரங்கள் தொடர்பான அறிக்கையினை மேலாண்மை இயக்குநர் தாட்கோ அவர்களிடமிருந்து பெற்று அரசுக்கு அனுப்புமாறு இயக்குநர்,ஆதிதிராவிடர் நலன் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.50268/நிதி (ஆதி(ம)பந/2016 நாள் 19.9.2016 இசைவுடன் வெளியிடப்படுகிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.அண்ணாமலை,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
மேலாண்மை இயக்குநர்,தாட்கோ சென்னை-18.
(சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் வழியாக)
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–35.
மாநில கணக்காயர், சென்னை 6/18 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 1/5.
உதவி சம்பளக் கணக்கு அலுவலர்.
நகல்:–
அமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித் (ஆதி(ம)பந)துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு–1, ஆதிந.5) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி பாகங்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்